₹100/-

4 - 4

ஞானகுரு

# மகிழ்ச்சி

சித்திரை 2025

எஸ்.கே.முருகன்



## விலகலும் இனிது








ஆசிரியர் பக்கம்

# பூவைப் போன்று விலகுங்கள்



வாழ்க்கை பயணத்தில் எந்த ஒரு உறவும் அதிகபட்சம் 25 ஆண்டுகள் மட்டுமே நெருக்கமானது என்கிறது ஓர் ஆய்வு. அதற்கு மேல் நீடித்தால் அதனை வரம் என்றே சொல்லலாம்.

பெற்றோர், பிள்ளை உறவும் 25 ஆண்டுகளே நெருக்கமாக இருக்கிறது. பள்ளி, கல்லூரி நண்பர்களும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு நெருக்கம் காட்டுவதில்லை. வேலை பார்க்கும் இடம், பக்கத்து வீட்டு நட்பு 10 ஆண்டுகள் நீடிப்பதே கடினம். இதில் கணவன், மனைவி உறவு மட்டுமே 25 ஆண்டுகளைத் தாண்டியும் தொடர்கிறது.

காதல், நட்பு, உறவு போன்ற பந்தங்களில் கருத்துவேறுபாடு ஏற்படுவது சகஜம். காரணம் சொல்லாமல் சிலர் பிரிவதுண்டு. சிலர் பிரிவதற்காக பொய் கூறுவதுண்டு. இதுபோன்ற தருணங்களில் மனம் வேதனைப்படலாம், இத்தனை காலமாகியும் நம்மை புரிந்துகொள்ளவில்லை என்று வருத்தம் வரலாம்.

அதற்காக அவர் செய்யும் அதே தவறை நீங்களும் செய்யாதீர்கள். அதாவது, அவர்களை சண்டை போட்டு காயப்படுத்தாதீர்கள். விலகிச் செல்பவரை பிடித்து வைக்க நினைக்காதீர்கள். புகார்களுக்கு எந்த விளக்கமும் கொடுக்காதீர்கள். ஏனென்றால், உண்மையான அன்பு இருக்கும் நபர்களுக்கு விளக்கம் தேவைப்படாது. அன்பு இல்லாதவர்களிடம் விளக்கம் கொடுத்தாலும் எடுபடாது.

மலர்ந்த பூ செடிக்கு வலிக்காமல் காம்பில் இருந்து விழுவதைப் போன்று அமைதியாக விலகுங்கள். எல்லா உறவும் ஒரு நாள் பிரியவே செய்யும் என்பதை புரிந்துகொண்டு தள்ளி நில்லுங்கள். எந்த காரணத்துக்காகவும் அவர்களை வெறுக்க வேண்டாம். அன்புடன் வழியனுப்பி வையுங்கள். அந்த உறவு மீண்டும் திரும்பிவரலாம். வராமலும் போகலாம்.

எல்லா உறவுகளையும் பிரிவுகளையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வந்துவிட்டால், அதுவே மகிழ்ச்சி.

# பழிக்குப் பழி வாங்கலாமா விஜய்...?

ஔவை சொல் மந்திரம்.

அப்பாவைக் கொலை செய்த வில்லனை பிள்ளை வளர்ந்து பெரியவனாகி வெட்டிப் போடுவது, காதலி அல்லது மனைவியை கற்பழித்தவனை கொடூரமாக கொலை செய்வது, குடும்ப சொத்தை ஏமாற்றியவனை குடும்பத்தோடு தீர்த்துக்கட்டுவது என நிறைய நிறைய சினிமாக்கள் வெளியாகி மாபெரும் வெற்றி அடைந்திருக்கின்றன.

சமீபத்தில் விஜய் நடித்த, 'தி கோட்', 'பீஸ்ட்' போன்ற படங்களின் கதை பழி வாங்கும் படலம் தான். தன் மனைவி, பிள்ளையின் மரணத்துக்குக் காரணமான விஜய்யின் பிள்ளையைக் கடத்திக் கொண்டுபோய் ஒரு கெட்டவனாக வளர்ப்பார் வில்லன் மோகன். அப்பா விஜய்யை பழி வாங்குவதற்காக தன்னுடைய காதலியை கொலை செய்யும் அளவுக்கு மகன் விஜய்யின் உணர்வுகள் மரத்துப் போயிருக்கும். பழி வாங்கும் உணர்ச்சிக்கு வில்லனும் தன் வாழ்வை முழுமையாக இழந்திருப்பார்.

அதேபோன்று, 'பீஸ்ட்' படத்தில் தன் தந்தை, சித்தப்பாவை எல்லாம் ரத்தம் சொட்டச் சொட்ட பழி வாங்குவார். ரத்தம் சிந்தும் காட்சிகளை வலிந்து திணிப்பதும், பழி வாங்கும் உணர்வை ரசிகர்களிடம் தூண்டுவதும் மோசமான வழி காட்டுதல்கள்.

அதேநேரம், 'அசுரன்' படத்தில் தனுஷ் தன் மகனிடம், 'பழி வாங்கும் உணர்வுகளுக்கு ஆளாகிவிடக் கூடாது, படிப்பு தான் முக்கியம்' என்று பாடம் கற்றுக் கொடுப்பார். பழி வாங்குவதை முழு நீளமாகக் காட்டிவிட்டு, அதன் பிறகு பாடம் போதிப்பது சரியில்லை என்றாலும், விஜய் படங்களில் அந்த எளிய படிப்பினை கூட இருப்பதில்லை.

பொதுவாகவே பழி வாங்கும் உணர்வு தானாக வருவதில்லை. யாரேனும் தூண்டுவதாலே அந்த உணர்வு உண்டாகிறது, அதிகரிக்கிறது. பழி வாங்கும் சிந்தனையில் மூழ்கியவர்கள் கண்களுக்கு வேறு நல்ல வழிகள் எதுவும் கண்ணுக்குத் தென்படாது. இதற்கு உதாரணமாக நெல்லையில் நடக்கும் தொடர் கொலைகளை சொல்லலாம்.



பழிக்குப்பழியாக நடக்கும் ஏழாவது கொலை, எட்டாவது கொலை என்று பல ஊர்களில், கிராமங்களில் நடந்துகொண்டே இருக்கிறது.

## வார்த்தைக் கொலை

உயிர்க் கொலை போலவே வார்த்தைக் கொலையும் அபாயகரமானது. சில வார்த்தைகளைக் கேட்டதும் அதீத கோபம் உண்டாகிறது. சில வார்த்தைகள் தற்கொலை செய்ய வைக்கிறது. சில வார்த்தைகள் ஊரை விட்டு ஓட வைக்கிறது. சில வார்த்தைகள் பழி வாங்கத் தூண்டுகிறது.

பழிக்குப் பழி வாங்கும் அளவுக்கு மிகப் பெரும் பாதிப்பு நடந்திருக்கலாம். வாழ்க்கை நிலைகுலைந்து மாறியிருக்கலாம், சொந்தத்தை இழந்திருக்கலாம். என்ன நடந்திருந்தாலும் பழிக்குப் பழி வாங்குவதால், நடந்துபோன எதையும் மாற்றிவிட முடியாது. வெறி நாய் கடித்தால் அதை திருப்பிக் கடிக்க முயற்சிப்பது போன்ற செயலே பழிக்குப் பழி வாங்கும் செயல். வெறி நாய் கடித்தவுடன் முதல் நடவடிக்கையாக நோய்த் தொற்றில் இருந்து உடலை பாதுகாக்க வேண்டுமே தவிர, அந்த வெறி நாயைப் பற்றி சிந்திக்கக் கூடாது. ஏனென்றால் வெறி பிடித்த நாய் எப்படியும் விரைவில் செத்துப் போகும். அதை நீங்கள் கொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

இந்த விஷயத்தில், பலவீனமான மனிதர்கள் மட்டுமே பழி வாங்குகிறார்கள். வலிமையான மனிதர்கள் மன்னிக்கிறார்கள். புத்திசாலி மனிதர்கள் அப்படிப்பட்ட சம்பவத்தைப் புறக்கணிக்கிறார்கள். ஒரு கன்னத்தைக் காட்டினால் மறு கன்னத்தைக் காட்டும் அளவுக்குநல்லவராகஇருக்கத்தேவையில்லை. மன்னிப்பதே எளிதான தீர்வு.

பழி வாங்கும் உணர்ச்சியைக் கைவிடுவது கொஞ்சம் கடினமான செயல் என்றாலும், முடியாதது அல்ல. பிறரால் நமக்குத் துன்பம் வருகையில், மிகப்பெரிய இழப்பு நேர்கையில், பழி வாங்கும் எண்ணம் வருகையில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்கலாம்.

## உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துங்கள்

பழி வாங்குவதால் நடந்து போன எதுவும் மாறாது. ஆனால் அடுத்து இதை விட மோசமாக நடப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஏனென்றால் பழி வாங்கும் உணர்வு சங்கிலித் தொடர் போன்று நடந்துகொண்டே இருக்கும். யார்

> ரத்தத்துக்கு ரத்தம் என்பது ஒரு முடிவிலா பயணம். வாழ்க்கை என்பது கொஞ்ச காலம். நம் வாழ்க்கையை நாமே முடிவு செய்வோம். பிறர் வாழ்க்கையை அழிப்பது நம் வாழ்வையும் அழிக்கும் செயல்.



ஒருவர் முற்றுப்புள்ளி வைக்கிறாரோ, அவரே வெற்றி பெறுகிறார். உணர்ச்சிகளுக்கு அடிமையாகி ஆயுதம் எடுத்தவர் தானும் பலியாகி தன் குடும்பத்தையும் இழந்துவிடுகிறார். ரோட்டில் செல்லும்போது கண்ணில் தூசு விழுந்துவிட்டது என்பதற்காக கண்ணைக் குத்திக்கொள்ள முடியாது. காற்றை பழி வாங்க இயலாது. எனவே, நடந்ததை ஏற்றுக்கொள்வது முக்கியம். பழி வாங்கும் உணர்வினால் மனம் விஷமாகிறது. இந்த விஷம் எதிரியை மட்டுமின்றி தன்னையும் அழித்துவிடும்.

## தூண்டுபவர்களிடமிருந்து விலகுங்கள்

பழி வாங்கவில்லை என்றால் செத்தவர்கள் ஆத்மா சாந்தியடையாது, நம்ம சாதிக்கு மரியாதை போயிடும், நம்ம இனத்தை யாரும் மதிக்க மாட்டாங்க என்றெல்லாம் வெறுப்பைத் தூண்டுபவர்களிடம் இருந்து விலகுங்கள். சாதிப்பெருமை, இனப்பெருமை, மதப்பெருமை என்றெல்லாம் நடந்த அநீதிக்கு சாயம் பூசாதீர்கள். நடந்தது அநீதியாக இருக்கலாம். காவல் துறையே உடந்தையாக இருக்கலாம். எப்படிப்பட்ட சூழல் என்றாலும் பிறர் வார்த்தைக்கு மதிப்பளிக்காதீர்கள். சுய கட்டுப்பாடு இருப்பவர்கள் மற்றவர்களுடைய தூண்டிலில் சிக்க மாட்டார்கள்.

## மன்னிப்பு என்பது பலம்

அமைதியாக இருப்பது அவமானம் அல்ல. மன்னிப்பது கோழையின் செயல் அல்ல. மன்னிப்பதற்கே மிகப்பெரும் பலம் தேவைப்படும். உணர்ச்சிவசப்பட்டு ஆயுதத்தைக் கையில் எடுப்பதற்கு சில நொடிகள் போதும். ஆனால், ஆயுதத்தினால் எதுவும் முடியப்போவதில்லை. நடந்த சம்பவத்தை மன்னிப்பதற்கே அதிக பலம் தேவைப்படுகிறது. மன்னிப்பு என்பது நடந்த செயலை மன்னிப்பதே தவிர, நடந்த குற்றத்தை மன்னிப்பது இல்லை. சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று அமைதியாக இருங்கள். மன்னிப்பதன் மூலம் கசப்புணர்வு மறைந்துவிடும். எதையும் தாங்கும் இதயம் என்று இதையும் தாங்கிக்கொள்ளுங்கள்.

## அவமானம் என்று எதுவுமில்லை

புத்தரை பாராட்டி வரவேற்ற சமயத்தில் அவர் மகிழவில்லை, புத்தரை அவமானம் செய்த நேரத்தில் வருந்தவில்லை. இரண்டிலும் எனக்கு எந்த பயனும் இல்லை என்பதில் தெளிவாக இருந்தார். புத்தரைப் போன்று வேதனை தருபவர்களை கண்டுகொள்ளாதீர்கள். அம்மாவை தவறாகப் பேசினார், எல்லோர் முன்னிலும் அவமானம் செய்தார், அறியாமல் நடந்ததுக்கு பெரிய தண்டனை என்றெல்லாம் ஆவேசம் அடையாதீர்கள்.

அவமானம் என்பது உண்மையல்ல. கடந்த காலம் எனும் ஆபத்தான வலையில் அவமானம் சிக்க வைத்துவிடும். அவமானத்தில் சிக்கியவர்களுக்கு வேறு எதிர்காலம் கண்ணுக்கே தெரியாது. எனவே, அவமானத்தை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. அவமானத்துக்கு எதிர்வினையாற்ற வேண்டிய அவசியம் கிடையாது. எதிர்காலமே எல்லாவற்றையும் விட முக்கியமானது.

## வெற்றியைப் பரிசாகக் கொடுங்கள்

மகிழ்ச்சியாக இருக்கக் கூடாது என்றே துன்பம் கொடுக்கிறார்கள். அவர்கள் கண் முன்பு மகிழ்ச்சியாகவும் வெற்றிகரமான மனிதராகவும் வாழ்ந்து காட்டுவதே எதிரிக்குக் கொடுக்கும் மாபெரும் தண்டனை. பழி வாங்குவதை விட சிறந்த பாதை இருக்கிறது என்று எதிரிக்குக் காட்டுங்கள். எதிரிகளைப் புறக்கணிப்பதே மாபெரும் பழி வாங்குதல். எத்தனை தடைகள் ஏற்படுத்தினாலும் அதை தாண்டிச் செல்லும் வலிமை இருக்கிறது என்பதைக் காட்டுவதே உண்மையான பழி வாங்குதல்.

பழி வாங்குவதில் கொஞ்சம் அற்ப சுகம் கிடைக்கலாம். ஆனால், அதன் பிறகு அந்த சக்கரம் நிற்கப்போவதில்லை. மீண்டும் வாழ்நாள் முழுவதும் ஒரு பழி வாங்குதலை எதிர்பார்த்து பயந்துகொண்டே வாழ வேண்டும். எனவே, பழி வாங்குதல் எனும் குணத்தைக் கைவிடுங்கள். இதற்கு ஒளவையார் காட்டிய வழியைக் கடைபிடிக்கலாம்.

**உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா**
**உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா**
**மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்**
**அம்மருந்து போல்வாரு முண்டு.**

என்று மூதுரையில் பாடியிருக்கிறார் ஒளவையார்.

வியாதி, நோய், பிணி போன்றவை உடன் பிறந்தவர்கள் போன்று துன்பம் தரலாம். இந்த நேரத்தில் எங்கோ வளர்ந்த மூலிகைகள் துன்பம் தீர்க்கின்றன. அதுபோல் தீமை, துரோகம் செய்தவர்களை மறப்பதற்கு நல்லவர்கள் பக்கம் சேருங்கள் என்கிறார்.

ரத்தத்துக்கு ரத்தம் என்பது ஒரு முடிவிலா பயணம். வாழ்க்கை என்பது கொஞ்ச காலம். நம் வாழ்க்கையை நாமே முடிவு செய்வோம். பிறர் வாழ்க்கையை அழிப்பது நம் வாழ்வையும் அழிக்கும் செயல்.





www.gyaanaguru.com

# வங்கியும் பள்ளியும்

## கொள்ளைக்காரர்கள்




கிணற்று நீரை இறைத்து ஊற்றிக் கொண்டிருந்த ஞானகுருவை சந்திக்க வந்தார் மகேந்திரன். முகத்தில் சோகத்துடன், ‘‘நான் மிகவும் சிக்கனமாக வாழ்க்கை நடத்துகிறேன். தேவையில்லாத செலவு களை எல்லாம் குறைத்துவிட்டேன். ஆனாலும், ஒவ்வொரு மாதமும் பணத்துக்கு நான் திண்டாட வேண்டியிருக்கிறது” என்று வருந்தினார்.

‘‘இனிமேல் நீ எந்த செலவையும் குறைக்காதே... வருமானத்தைப் பெருக்கு”

‘‘அதெப்படி நான் மாதச் சம்பளத்தில் வேலை செய்கிறேன்... இந்த வேலைக்கு எங்கு போனாலும் இந்த அளவே சம்பளம் கிடைக்கும்..”

“வேண்டும் என்று தேடுபவருக்கு வழிகள் திறக்கும், வேண்டாம் என்பவருக்குக் காரணங்கள் தென்படும்...”

‘‘அப்படியென்றால் நான் சரியாகத் தேடவில்லை என்கிறீர்களா..?”

‘‘ஆம், நீ இப்போது பார்க்கும் இதே வேலைக்கு இதே சம்பளம் என்றால், உன்னுடைய மேல் அதிகாரி என்னென்ன வேலை செய்கிறார் என்று முழுமையாகக் கவனி. அவருடைய பதவி அடைவதற்கு முயற்சி செய். உன் நிறுவனத்தில் அது சாத்தியமில்லை என்றால் வேறு ஒரு நிறுவனத் தில் அவர் வகிக்கும் பதவிக்கு முயற்சி செய். வேலை கிடைக்கும், சம்பளம் கூடும்...”

“அது ரிஸ்க் இல்லையா..?”

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

## பணம் தரும் மந்திரம்



“ரிஸ்க் எடுக்கத் தயங்குபவர் ஒருபோதும் முன்னுக்கு வர மாட்டார். உனக்கு அதற்கு விருப்பம் இல்லை யென்றால் பகுதி நேரமாக ஏதாவது வேலை செய்....”

“எனக்கு என்ன தெரியும்?”

“அதை நீயே கண்டுபிடிக்க வேண்டும். நன்றாக படம் வரைவாய் என்றால் ஓவிய வகுப்பு தொடங்கு. சமைக்கத் தெரியும் என்றால் சப்பாத்தி செய்து கொடு... இதற்கெல்லாம் கஷ்டம் என்றால் உன்னிடம் இருக்கும் சொத்துக்களை சம்பாதிக்கச் செய்..”

“சொத்து என்றால்..?”

“எவ்வளவு நகை வைத்திருக்கிறீர்கள்..?”

“30 பவுன் இருக்குமென்று நினைக்கிறேன்... லாக்கரில் வைத்திருக்கிறேன்..”

“பணத்தை பதுக்கி வைத்திருக்கிறாய். உனக்கு எவ்வளவு தேவையோ அதை மட்டும் வீட்டில் வைத்துவிட்டு மீதியை விற்பனை செய். அந்தப் பணத்தை பாதுகாப்பாக முதலீடு செய்...”

‘’திடீர் அவசரம் என்றால் பயன்படுத்துவதற்கு வைத்திருக்கிறேன்..”

“இத்தனை ஆண்டுகளில் ஏதேனும் அவசரம் வந்ததா..?”

“இல்லை...”

‘’இத்தனை ஆண்டுகளாக நகையை பூட்டி வைத்து அதற்கு கட்டணமும் கொடுத்துவருகிறாய். பணம் சம்பாதிக்க நினைத்தால் முதலில் லாக்கரை மூடு. அது ஒரு கொள்ளைக் கூடம். நகை உன் வீட்டில் இருப்பதும் லாக்கரில் இருப்பதும் ஒன்று தான்...”

”அதெப்படி... லாக்கரில் இருப்பது தானே பாதுகாப்பு..?”

‘’யார் அப்படி சொன்னது.. நாளை உன்னுடைய வங்கியில் ஒரு கொள்ளை சம்பவம்நடந்துஉன்நகையைகொள்ளையர்கள் எடுத்துக்கொண்டு போய்விட்டால் அதற்கு யாரும் பொறுப்பேற்பார்களா..?”

“வங்கியில்தானே வைத்தேன், அவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும்...”

‘’வங்கி லாக்கரில் நீ என்ன வைத்தாய் என்பது அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்கள் பொறுப்பு ஏற்கவும் மாட்டார்கள். இதில் சந்தேகம் இருந்தால், அவர்களிடம் சென்று மீண்டும் ஒரு முறை கேட்டு உறுதி படுத்திக் கொள். உன்னிடமிருக்கும் நகைக்கு இன்சூரன்ஸ் எடுத்துக்கொண்டால் மட்டுமே அது கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஊரில் ஏதாவது நிலம் இருக்கிறதா..?”

“கொஞ்சம் நிலம் வாங்கிப் போட்டிருக்கிறேன். விலை ஏறியதும் விற்பனை செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறேன்..”

“விலை ஏறும் வரையில் ஏன் சும்மா இருக்க வேண்டும்..? யாருக்காவது நிலத்தை குத்தகைக்கு விடு அல்லது வாடகைக்குக் கொடு. உனக்குத் தேவைப்படும் நேரத்தில் திரும்பக் கிடைப்பதற்கு ஏற்ப சட்டப்பூர்வமாக பத்திரம் பதிந்துகொள்... உன் பிள்ளைகள் எங்கே படிக்கிறார்கள்..?”

“ஒரு பெரிய தனியார் பள்ளியில். அதற்குத் தான் அதிக பணம் செலவாகிறது...”

“நீ எங்கு படித்தாய்..?”

“நான் அரசு பள்ளியில் ஒரு பைசா கூட செலவில்லாமல் படித்தேன்...”

“உன் பிள்ளைகளையும் அங்கே படிக்கச் சொல். அவர்களுக்கு நீ செலுத்தும் கட்டணத் தொகையை பாதுகாப்பாக முதலீடு செய். உன்னுடைய அவசரச் செலவுக்கும் பயன்படுத்தலாம், நாளை உன் பிள்ளை களின் மேற்படிப்புக்கும் அது உதவியாக இருக்கும்...”

“அதெப்படி, அக்கம்பக்கத்தில் எல்லோரும் பிரைவேட் ஸ்கூல்ல படிக்க வைக்கும்போது நான் மட்டும் கவர்ன்மென்ட் ஸ்கூல்ல சேர்க்க முடியும். நாலு பேர் தப்பாப் பேசுவாங்களே...”

”அந்த நாலு பேரிடம் சென்று உன் பணப் பிரச்னைக்குத் தீர்வு கேள்” என்றபடி பேச்சை முடித்துக்கொண்டார் ஞானகுரு.

www.gyaanaguru.com



## கவித்துவம்



மாதக்கடைசியில்
மகள் உறங்கியபின்
வீட்டைகையில்
அப்பாவின் முகச்சாயல் எனக்கு.
கேட்டதை மறந்து
காலையில் எழுந்து புன்னகைக்கையில்
அம்மாவின் முகச்சாயல்
அவளுக்கு.

– கௌ.ஆனந்தபிரபு

www.gyaanaguru.com

# சண்டை போடாமலும் டைவர்ஸ் வாங்கலாம்... வழக்கறிஞரின் வழிகாட்டுதல்




திருமண உறவு என்பது ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் அன்புடனும் வாழ்வதற்கு உருவாக்கப்பட்டது. ஆனால், இந்த உறவுக்குள் சண்டை, சந்தேகம், ஏமாற்றம், துரோகம் நடக்கையில் வாழ்க்கையே துன்பமாகிறது. உடலும் மனமும் பாதிப்படைகிறது. குழப்பத்தினால் பொருளாதாரச் சிக்கலும் உருவாகிறது. இது போன்ற தருணங்களில் தெளிவான வழிகாட்டுதலும் சரியான முடிவும் அவசியம். விவாகரத்து வழக்குகளில் முடிவுகள் எட்டப்படாமல் பல ஆண்டுகள் இரண்டு குடும்பமும் அவதிப்படுவதை நிறையவே பார்த்திருக்கிறோம். ஆகவே, திருமண உறவுக்குள் சண்டை வருகையில் என்ன செய்ய வேண்டும் என்று பார்க்கலாம்.

### 1. உண்மையான பிரச்னையைக் கண்டுபிடியுங்கள்

ஒரு பிரச்னை அல்லது சண்டை வந்தவுடன் பிரிவது என்று உணர்ச்சிவசப்படாதீர்கள். எத்தகைய நல்ல தம்பதியர் என்றாலும் சின்னச்சின்ன சண்டைகள் வருவதைத் தவிர்க்க முடியாது. கருத்துவேறுபாடு எழுவதற்கும் சகிக்க முடியாத சண்டைக்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. ஆகவே, இது ஒரு தற்காலிகப் பிரச்னையா அல்லது தீர்க்க முடியாத சிக்கலா என்பதை கண்டுபிடியுங்கள். அமைதியாக அமர்ந்து நிதானமாக யோசியுங்கள். உங்கள் இணையர் கோணத்தில் இருந்து சண்டையின் காரணத்தைத் தேடிப் பார்த்தால் பிரச்னையின் ஆணி வேர் எதுவென கண்டுபிடித்துவிடலாம்.

### 2. பிரச்னைக்கு முற்றுப்புள்ளி

இரண்டு நாடுகளுக்கு இடையிலான பிரச்னைகளையே பேசித் தீர்க்கிறார்கள். அது போல் இரண்டு நபருக்கு இடையில் வரும் பிரச்னையையும் நிச்சயமாகப் பேசித் தீர்க்க முடியும். எனவே, சண்டையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள விருப்பம் இருக்கிறதா..? பேசினால் முடிந்துவிடுமா..? பேசினாலும் மீண்டும் மீண்டும் வருமா என்பதையெல்லாம் யோசியுங்கள். நிறைய சண்டையின் ஆரம்ப காரணம் மிகவும் சாதாரணமாக இருக்கும், அதன்பிறகு பேசிய பேச்சுகள், வன்முறையால் அந்த சண்டை பெரிதாக மாறியிருக்கும். எப்படியென்றாலும் முற்றுப்புள்ளி வைக்க முடியுமா? இணைவதால் உடல் நலனுக்கும் மன நலனுக்கும் எந்த பிரச்னையும் இல்லையா என்பதை தெளிவாக ஆய்வு செய்யுங்கள்.



**எம்.நிலா,** வழக்கறிஞர்,
ஜிஜி லீகல் சர்வீசஸ், மதுரை

### 3. இரண்டில் ஒன்று

சண்டைக்குப் பிறகு சேர்வது அல்லது பிரிவது என எதுவாக இருந்தாலும் பிறரிடம் ஆலோசனை கேட்காதீர்கள். யாரும் உங்களுக்குத் துணையாக வர மாட்டார்கள். உங்கள் வாழ்க்கையை நீங்கள் மட்டுமே நகர்த்த வேண்டும். ஆகவே, சேர்வது அல்லது பிரிவது என்று எந்த முடிவு எடுத்தாலும் அதை திடமான மனதுடன் எடுங்கள். மற்றவர்கள் வழி காட்டினார்கள் என்று எந்த முடிவும் எடுத்து மாட்டிக் கொள்ளாதீர்கள்.

### 4: சரியான வழக்கறிஞர் முக்கியம்

திருமணத் தகராறு ஏற்படுகையில் மிகவும் சரியான வழக்கறிஞரைத் தேர்வு செய்யுங்கள். ஏனென்றால், உங்கள் வாழ்க்கையை அவர் கையில் ஒப்படைக்கிறீர்கள். அதை அவர் சரியாகப் புரிந்துகொண்டு உங்களுக்கு உதவ வேண்டும். அந்த வகையில் கீழ்க்கண்ட தகுதி கொண்ட வழக்கறிஞரை தேர்ந்தெடுங்கள்.

உங்கள் விவகாரத்தை ஆழமாகவும் பொறுமையுடனும் கேட்பவர் உங்களுக்கு சரியான வழியை சுட்டிக் காட்டுபவர் போதிய சட்டத் திறன் மட்டுமின்றி சமாதானம் பேசும் மனப்பான்மை கொண்டவர். பொதுவாக ஒரு திருமண வழக்கை நீதிமன்றத்தில் ஓர் ஆண்டில் முடிப்பதும் 10 ஆண்டுகளாக நீட்டிப்பதும் வழக்கறிஞர் கையில் உள்ளது. எனவே, திறமையாக சமாதான பேச்சுவார்த்தை நடத்தும் வழக்கறிஞரால் பல ஆண்டுகளை சேமித்து உங்களுக்கு நிம்மதியைக் கொடுத்துவிட முடியும்.

### தவறான வழிகாட்டுதல்

பல சமயங்களில், விவாகரத்து செய்வதற்குப் பதிலாக, சேர்ந்து வாழும் உரிமைக் கோரலுக்கு (RCR) மனு அளிக்கச் சொல்வார்கள். இது பிரச்னையைத் தீர்ப்பதற்கு உதவாது. ஒருவர் வேண்டாம் என்று உறுதியாகச் சொல்லும்போது விலகுதலே சரியான தீர்வு. அப்படியின்றி சேர்ந்து வாழ வேண்டும் என்று அடம் பிடிப்பது எதிர்காலத்தில் சேரவும், விவாகரத்து பெறவும் வழி காட்டாது. உண்மையைச் சொல்வது என்றால் இது பிரச்னையை மேலும் தீவிரப்படுத்திவிடும்.

### பொறுமை அவசியம்

திருமணம் முடிப்பதற்கு முன்பு நிறைய நேரம் யோசித்திருப்பீர்கள். ஆனால், சண்டை வந்தவுடன் அவசரப்பட்டு பிரிதல் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. குடும்பம், நண்பர்கள், சமூக ஊடகங்கள் என பல கருத்துகள் உங்கள் மீது திணிக்கப்படலாம். அவற்றுக்கெல்லாம் மதிப்பு கொடுக்காதீர்கள். ஏனென்றால், அவசரப்பட்டு எடுக்கும் முடிவுகள் பெரும்பாலும் தவறாகவே இருக்கும்.

எங்களிடம் வரும் தம்பதியர்களை பேச்சுவார்த்தை மூலம் சேர்ந்து வாழ்வதற்கே ஆலோசனை சொல்கிறோம். அதற்கு வழி இல்லை என்றால் இரண்டு பேரும் இணைந்து பேசி நேர்மையான முறையில் விவாகரத்து பெறுவதற்கு வலியுறுத்துகிறோம். இதன் மூலம் இரண்டு தரப்பும் மன அமைதியும், நிம்மதியும் பெறுகிறார்கள். அதோடு அதிகபட்சம் 1 வருடத்திற்குள் வழக்கை முடித்து விவாகரத்து பெற முடிகிறது.

எனவே, திருமணத்தில் வரும் எல்லா பிரச்னைகளுக்கும் நீதிமன்றத்துக்கு வரத் தேவையில்லை. அப்படி வருவது என்றாலும் தம்பதியர் நலன் நாடும் வழக்கறிஞரைத் தேர்ந்தெடுங்கள். வெற்றி தரும் வழக்கறிஞரை விட உங்கள் வாழ்க்கையைப் பாதுகாக்கும் வழக்கறிஞரைத் தேர்வு செய்யுங்கள்.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com



# 1,000 மணி நேர தத்துவம்

**உங்கள் தனித்துவத்தைக் கண்டு பிடியுங்கள்.**

வெற்றி அடைவதற்கு குறுக்கு வழிகள் கிடையாது, ஆனால் பல்வேறு சூத்திரங்கள் உண்டு. அதில் முதன்மையானது, தனித்தன்மை கண்டுபிடித்தல்.

இந்த உலகில் கோடானு கோடி மனிதர்கள் இருக்கிறார்கள். உடலும் உயிரும் எல்லோருக்கும் பொதுவானது. அதேநேரம், எல்லா மனிதரும் ஒன்றல்ல. ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதத்தில் மாறுபட்டவர்கள். மனிதர்களின் உருவ அமைப்பு மட்டுமின்றி குணம், கொள்கை, ரசனை, ஆசை, எதிர்பார்ப்பு, லட்சியம் போன்றவை எல்லாமே வேறுபடுகிறது.

அதனால் தான் ஒருவருக்குப் பிடிக்கும் உடை வேறு ஒருவருக்குப் பிடிப்பதில்லை. ஒருவரைக் கவர்ந்த சினிமா வேறு ஒருவருக்கு மோசமாகத் தெரிகிறது. அத்தனை வகை மனிதர்களையும் திருப்திபடுத்தும் தேவை இருப்பதாலே ஐஸ் க்ரீம், சாக்லேட் போன்றவை ஏராளமான ஃப்ளேவர்களில் விதவிதமாக உருவாக்கப்படுகின்றன.


www.gyaanaguru.com

# 10,000


ஒருவருக்கொருவர் வேறுபாடு இருப்பது எத்தனை உண்மையோ அதே போன்று ஒவ்வொரு நபருக்கும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. தனித்தன்மை எது என்பதை ஒருவர் எத்தனை விரைவில் கண்டுபிடிக்கிறாரோ, அத்தனை விரைவில் வெற்றியைத் தொட்டுவிட முடியும். அப்படி என்னிடம் எந்த இல்லை என்று நிறைய பேர் மனம் வருந்துவதுண்டு. உண்மை என்னவென்றால், தனித்தன்மையைக் கண்டுபிடிக்க அவர்கள் முயற்சி எடுக்கவில்லை என்பது தான். எல்லோருக்கும் நிச்சயம் ஒரு தனித்தன்மை உண்டு.

தெருவுக்குத் தெரு டீ கடைகள் இருக்கின்றன. பெரும்பாலான கடைகளில் டீ மாஸ்டர்களின் செயல் ஒரே மாதிரி இருக்கும். ஆனால், ஒரு சிலர் மட்டும் வித்தியாசமாக, ஸ்டைலாக, டீ போடுவதைக் கண்டு வியந்திருப்பீர்கள். அந்த வித்தியாசமே அவரது தனித்தன்மை.

பொதுவாக யாரேனும் ஒருவர் ஒரு வேலையை 10 ஆயிரம் மணி நேரம் தொடர்ந்து செய்துவந்தால், அவர் அந்த வேலையில் தனித்திறன் பெற்றுவிடுகிறார் என்கிறது ஆய்வு. அதாவது ஒருவர் நாலைந்து ஆண்டுகள் ஒரே வேலையை செய்கிறார், அதுவும் ஆர்வமுடன் செயல்படுகிறார் என்றால், அந்த பணி அவருக்கு சுலபமாக கை கூடிவிடும். அந்த வேலையில் அவர் நிபுணத்துவம் பெற்று அவரது தனித்தன்மையாக மாறிவிடும்.

10 ஆயிரம் மணி நேரம் வேலை செய்தும் ஒருவர் அதில் நிபுணத்துவம் பெறவில்லை என்றால், அது அவருக்குப் பிடிக்காத வேலை, கடமைக்காகப் பணியாற்றுகிறார் என்றே அர்த்தம். அந்த வேலையை உதறிவிட்டு மனதுக்குப் பிடித்த வேலை அல்லது தொழிலுக்கு மாறாத வரையிலும் அவருக்கு வெற்றி கிடைக்காது.

www.gyaanaguru.com





“வீட்டிலும் வயலின் பிராக்டீஸ் செய்திருக்கிறார்கள். அதாவது இவர்கள் 5 பேரும் 10 ஆயிரம் மணி நேரத்தை விட அதிகமாக பயிற்சி எடுத்திருக்கிறார்கள், அதனாலே ஜெயித்திருக்கிறார்கள். ஆர்வமும், பயிற்சியும் அவர்களது தனித்தன்மையைக் கண்டறியவும் வெற்றியடையவும் வைத்திருக்கிறது.”

தனித்துவம் கண்டறிவதற்கு ஆர்வமும் கொஞ்சம் மெனக்கெடலும் இருந்தால் போதும். ஒருவர் 100 கிலோ எடையை எளிதாகத் தூக்குகிறார், மற்றவர் தடுமாறுகிறார் என்றால், முன்னவர் நிறைய பயிற்சி செய்திருக்கிறார் என்பதே காரணம். அந்த பயிற்சியே நிபுணத்துவம், தனித்துவம் கொண்டுவருகிறது. ஒரு குறிப்பிட்ட வேலை செய்கையில் பசி, தூக்கம் மறந்து ஈடுபடுகிறார் என்றால், அதுவே அவரது தனித்துவப் பணி.

தனித்துவம் எதுவென கண்டறிவது மட்டும் முக்கியமல்ல, அதில் தொடர்ந்து பயிற்சி பெற வேண்டும். புதிய புதிய தொழில்நுட்பங்களை அதில் சேர்க்க வேண்டும். கராத்தே கலையில் புரூஸ்லி புகழ் அடைந்தவுடன் நின்றுவிடவில்லை. அதன் பிறகும் தினமும் 6 மணி நேரம் பயிற்சிகள் எடுத்தார். குங்ஃபூ, மல்யுத்தம், குத்துச்சண்டை ஆகியவற்றையும் கற்றுக்கொண்டு தன்னுடைய கலையில் அவற்றை புகுத்தினார். அதனாலே அவரது கராத்தே வித்தியாசமாகவும் தனித்துவமாகவும் ஜொலித்தது. மரணம் வரையிலும் அவர் புதுப்புது சண்டை முறைகளை கற்றுக்கொண்டே இருந்தார்.

அதே பாணியில் பிரபலமானவர் ஜாக்கிசான். அவரது தனித்தன்மையாக சண்டைக் காட்சிகளில் நகைச்சுவையைப் புகுத்தினார். ஆக்ரோஷமாக மட்டுமின்றி புத்திசாலித்தனத்துடனும் ஜாலியாகவும் சண்டை போட்டு ஜெயிக்க முடியும் என்று காட்டினார். ஜாக்கிசான் 60 வயது வரையிலும் தினமும் 8 மணி நேரம் பயிற்சிகள் எடுத்துக்கொண்டே இருந்தவர். எனவே, தனித்துவத்தைக் கண்டறிந்தால் மட்டும் போதாது. மேலும் மேலும் பயிற்சிகள் எடுத்து அந்த தனித்துவத்தை மெருகேற்ற வேண்டும்.

இந்த தனித்துவ தத்துவத்தை உறுதிபடுத்த மனோதத்துவ நிபுணர்கள் ஒரு குறிப்பிட்ட பள்ளியில் வயலின் வகுப்பு அறிமுகம் செய்தார்கள். அதாவது, ஒன்றாம் வகுப்பில் இருந்து எல்லா மாணவர்களும் தினமும் கண்டிப்பாக அரை மணி நேரம் வயலின் பயிற்சி எடுத்தே ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். அந்த பள்ளியில் படித்த எல்லோருக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டன. சுமார் 1,000 மாணவர்கள் படித்த அந்த பள்ளியில் 10ம் வகுப்பு முடிக்கையில் ஐந்து மாணவர்கள் மட்டும் வயலின் இசையில் நிபுணத்துவம் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள்.

அவர்களுக்கு மட்டும் எப்படி நிபுணத்துவம் கிடைத்தது என்று ஆய்வு செய்யப்பட்டது. அவர்கள் வீட்டிலும் வயலின் பிராக்டீஸ் செய்திருக்கிறார்கள். அதாவது இவர்கள் 5 பேரும் 10 ஆயிரம் மணி நேரத்தை விட அதிகமாக பயிற்சி எடுத்திருக்கிறார்கள், அதனாலே ஜெயித்திருக்கிறார்கள். ஆர்வமும், பயிற்சியும் அவர்களது தனித்தன்மையைக் கண்டறியவும் வெற்றியடையவும் வைத்திருக்கிறது.

வாழ்க்கையில் எதுவுமே சுலபமாகக் கிடைப்பதில்லை, அதேநேரம் தனித்துவம் பெற்றவர்களுக்கு எல்லாமே சுலபம்.

www.gyaanaguru.com

மனம் செய்யும் மாய விளையாட்டு





# பிரச்னைகளுக்கே

## மக்கள் ஆசைப்படுகிறார்கள்

“எதை விரும்புகிறீர்களோ அதுவே உங்களுக்குக் கிடைக்கும் என்பதே இந்த உலகத்தின் மாறா விதி” என்றார் ஞானகுரு. அதைக் கேட்ட மகேந்திரன், ‘அப்படியென்றால் இந்த உலகத்தில் எல்லோரும் மகிழ்ச்சிக்குத்தானே ஆசைப்படு கிறார்கள், மகிழ்ச்சி ஏன் கிடைப்பதில்லை..? என்று கேள்வி எழுப்பினார்.

‘’அது தான் இல்லை. ஒரு பிரச்னை இருக்கும் நேரத்தில் அந்த பிரச்னைக்காக வருந்துவது மனிதர்களின் இயல்பு. ஆனால், மகிழ்ச்சியான நேரத்திலும் பிரச்னையை எதிர்பார்க்கிறார்கள். லட்சக்கணக்கில் செலவழித்து கல்யாணம் நடத்துகிறார்கள். கல்யாணம் நடத்தும் பெற்றோர்களிடம் கேட்டுப் பாருங்கள், ‘ஆசைப்பட்ட மாதிரி கல்யாணம் செய்றோம், அவங்க ரெண்டு பேரும் சண்டை போடாம இருக்கணும்’ என்பார்கள். போட்டியில் வெற்றி பெற்று வந்த வனை அனைவரும் பாராட்டும் நேரத்திலும் அவனுக்கு மட்டும், ‘அடுத்த போட்டியிலும் வெல்ல வேண்டுமே’ என்ற பதட்டம் தென்படும். இப்படி மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரத்திலும் பிரச்னையைத் தேடுகிறார்கள்.

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
4 - 4

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**


நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com



**மந்திரச் சொல்**

உங்கள் உணர்ச்சிகளை பிறர் முன்பு காட்டாதீர்கள். யாருக்கும் அதைப் பற்றிய அக்கறை இல்லை.

இன்னொரு வகை மனிதர்கள் இருக்கிறார்கள். அதாவது வாழ்க்கையில் எல்லாமே நல்லபடியாக நடக்கிறது, ஒரு பிரச்னையும் இல்லை என்றாலும், 'ஏதோ ஒரு மிகப்பெரிய பிரச்னை வரப்போகிறது என்று நினைக்கிறேன், அதனால் தான் இப்படி நிறைய நல்லது நடக்கிறது' என்று பதட்டம் அடைகிறார்கள். இப்படி பிரச்னை களுக்கு ஆசைப்படுவதாலே பிரச்னைகள் வருகிறது” என்றார்.

### ”அப்படியென்றால் நிறைய பணம் இருப்பவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்களா..?

”பணம் மகிழ்ச்சி தராது என்பதற்கு புத்தரைத் தவிர வேறு யாரையும் உதாரணம் காட்டத் தேவையில்லை. அவர் ஓர் இளவரசன், அரச வாழ்க்கை, அருமையான குடும்பம், உலக வாழ்க்கைக்குத் தேவையான எல்லாமே அவருடைய கைக்கெட்டும் தூரத்தில் இருந்தது. ஆனாலும் அவர் மகிழ்ச்சி அடையவில்லை. பிரச்னைகளைத் தேடி ஓடினார். அதுபோல் நிறைய பணம் வைத்திருப்பவர்கள் அவரவருக்கு ஏற்ற பிரச்னை களைத் தேடிக் கொள்கிறார்கள். மனிதர்களுக்கு உணவு, உடை, வீடு ஆகியவை தாண்டி எதற்கும் பணம் உபயோகப்படுவதில்லை. அதிக பணம் இருந்தால் அதிக மகிழ்ச்சி என்பது இல்லை. அதிக பணம் என்றால் அதிக பிரச்னைகள் என்பதே உண்மை...”

> “மகிழ்ச்சியில் இருக்கும் போது, இதைவிட பெரிய மகிழ்ச்சி கிடைக்கவில்லை என்றாலும் இதுவே போதும் என்று அனுபவிக்க வேண்டும். இந்த கணத்தில் வாழ்வதற்குக் கற்றுக்கொண்டால் காணும் இடம் எல்லாம் மகிழ்ச்சியாகத் தென்படும்”

### “அப்படியென்றால் எங்கே இருக்கிறது மகிழ்ச்சி..?

“எது இருக்கிறதோ அதுவே மகிழ்ச்சி. ஆனால் நம்மிடம் எது இல்லையோ அதுவே மகிழ்ச்சி என்றே மக்கள் நினைக்கிறார்கள். அதாவது நிரந்தரமான வேலை, சம்பள உயர்வு, தேர்வில் வெற்றி, புது வீடு, புதிய வாகனம், புதிய நகை போன்றவைகளில் மகிழ்ச்சி இருக்கிறது என்று உழைக்கிறார்கள். இவை கிடைத்ததும் மகிழ்ச்சி கிடைக்கிறது. ஆனால், அதை அனுபவிப்பதற்குள் அடுத்த மகிழ்ச்சிக்கு ஏங்குகிறார்கள். இன்னும் கொஞ்சம் பெரிய வீடு, காஸ்ட்லி கார் என்று அடுத்த ஆசையில் மகிழ்ச்சி இருப்பதாக நம்புகிறார்கள். இப்படி மகிழ்ச்சி இல்லாத ஒன்றில் இருப்பதாக நம்புவதால், அந்த இலக்கை அடையவே முடியாமல் தடுமாறுகிறார்கள். மகிழ்ச்சியைத் தேடி ஓடிக்கொண்டே இருக்கிறார்கள்...”


### ‘‘பிரச்னைகளை யோசிக்காமல் மகிழ்ச்சியை அனுபவிப்பது எப்படி..?”

“ஹோட்டலுக்குப் போய் சாப்பிடுகிறீர்கள் என்றால் ஒவ்வொரு உணவையும் ரசித்து உண்பதே மகிழ்ச்சி. எத்தனை பில் வரப்போகிறது, இதை சாப்பிட்டால் ஜீரணமாகுமா என்றெல்லாம் யோசித்தால் மகிழ்ச்சி காணாமல் போய்விடும். எனவே, கிடைக்கும் மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால் இந்த நிமிடத்தில் வாழ வேண்டும். இப்போது பிரச்னை இருக்கிறது என்றாலும், இந்த பிரச்னை பரவாயில்லை, பெரிதாக வரவில்லை என்ற மகிழ்ச்சி எண்ணத்தை உருவாக்க வேண்டும். மகிழ்ச்சியில் இருக்கும்போது, இதைவிட பெரிய மகிழ்ச்சி கிடைக்கவில்லை என்றாலும் இதுவே போதும் என்று அனுபவிக்க வேண்டும். இந்த கணத்தில் வாழ்வதற்குக் கற்றுக்கொண்டால் காணும் இடம் எல்லாம் மகிழ்ச்சியாகத் தென்படும்” என்றார் ஞானகுரு.

மகேந்திரனுக்கும் மகிழ்ச்சி தென்பட்டது.


www.gyaanaguru.com

ஞானகுரு தரிசனம்




# நாளில் கோயிலுக்குப் போனால்..?



ஞானகுருவை சந்திக்க வந்தார் மகேந்திரன். அவராகவே பேசத் தொடங்கினார். ‘’இன்று கோயிலுக்குப் போவதற்கு நினைத்திருந்தோம், மனைவிக்கு அந்த மூன்று நாட்கள் ஆரம்பமாகிவிட்டது. அதனால் நானும் செல்லவில்லை. உங்களை சந்திக்க வந்துவிட்டேன்’’ என்றார்.

“கோயிலுக்குப் போனால் தீட்டு, என்னை சந்திக்க வந்தால் தீட்டு இல்லையா..?” சிரித்தபடி கேட்டார் ஞானகுரு.

‘’மனிதரை சந்திக்கலாம், கடவுளைத்தான் சந்திக்கக் கூடாது. மாதவிலக்கு நாட்களில் அந்த பெண் மட்டுமின்றி, அவரது குடும்பத்தினரும் கோயிலுக்குப் போகக்கூடாது என்று வேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது..”


‘’அப்படியா..? மாதவிலக்கு நாளில் பெண்கள் ஏன் கோயிலுக்குப் போவதில்லை என்று தெரியுமா?” ஆர்வமுடன் கேட்டார் ஞானகுரு.

“ஒண்ணும் தெரியாதவர் மாதிரி கேட்குறீங்க. மாதவிலக்கு நாட்களில் ரத்தம் வெளியாகிறது. பெண்கள் உடல் அசுத்தமாக இருக்கிறது. அவள் இந்த நாட்களில் குளித்தாலும் சுத்தமாகி விட்டதாக அர்த்தம் எடுத்துக்கொள்ள முடியாது. பெண்ணுக்கு ரத்தப்போக்கு நேரத்தில் அதிக பாக்டீரியா, வைரஸ் கிருமிகள் வெளியாவதால் கோயில் அசுத்தமாகிவிடும்.

மேலும் கோயிலில் நடக்கும் பூஜைகள், புனஸ்காரங் களில் சக்தி மேல் நோக்கிச் சென்று இறைவனை அடைகிறது. ஆனால், பெண் உதிரம் கீழ் நோக்கி பாயும் ஆற்றலும் சக்தியும் கொண்டது. அவள் உடல் உஷ்ணத்தை அதிகம் வெளி யேற்றும். இவை எல்லாம் இறை சக்தியை தடுமாறச்



www.gyaanaguru.com



செய்யும். இந்த காலகட்டத்தில் பெண் உடம்பிலும் மனதிலும் தீய எண்ணங் கள் தோன்றுகின்றன. அவையும் கோயிலுக்குள் வரும் பக்தர்களின் எண்ண அலைகளைப் பாதிக்கும். பெரியவர்கள் காரணமில்லாமல் எதையும் சொல்ல வில்லை" என்று முடித்தார் மகேந்திரன்.

"பெண் இப்போது நாப்கின் பயன்படுத்து கிறாள், அதனால் ரத்தம் கசிவதில்லை, பிறகு ஏன் அவளுக்குக் இந்த கட்டுப்பாடு? கோயிலுக்குள் எத்தனையோ நோயாளி வருகிறார், அவரிடமிருந்து பாக்டீரியா பரவாதா..? கொலையாளி வருகிறார், கொள்ளைக்காரர் வருகிறார், அவர்களிட மிருந்து தீய எண்ணங்கள் மற்றவர்களுக்குப் பரவாதா..? ரத்தம் வரும் உடல் தீட்டு என்றால் சிறுநீர் வரும் உடல், மலம் தங்கியிருக் கும் உடல் தீட்டு இல்லையா..?"

"குதர்க்கமாகப் பேசாதீங்க... பிறகு எதுக்கு பெரியவங்க அப்படி சொன்னாங்க..?"

"முன்பு எல்லோரும் ஆறு, குளம், கிணறு போன்ற எல்லோருக்கும் பொதுவான நீர்நிலைகளில் குளித்தார்கள். பெண்கள் அந்த நாட்களில் குளிப்பதால் நீர்நிலை அசுத்தம் அடையும் என்பதால் குளிக்கக்கூடாது என்று சொன்னார்கள். குளிக்காமல் கோயிலுக்குப் போவது சுத்தமில்லை என்று கட்டுப்படுத்தினார்கள். இப்போது காலம் மாறிவிட்டது. அந்த மூன்று நாட்களும் வீட்டில் குளிக்கிறார்கள், சுத்தமாக இருக்கிறார்கள், வேலைக்குப் போகிறார்கள்.

மாதவிலக்கு காலத்தில் படிக்கவும், சம்பாதிக்க வும் பெண்ணை வெளியே அனுப்பும் ஆண்கள் அவர்களை கோயிலுக்குச் செல்ல மட்டும் அனுமதிப்பதில்லை. இதை பெண்களும் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் இன்னமும் அடிமை எண்ணத்திலே இருக்கிறார்கள். அதுசரி, சித்தர்கள் இதற்கு என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா..? சித்தர்களும் முன்னோர்கள் தானே..."

"கண்டிப்பாக. அவர்களும் அந்த காலத்தில் பெண்கள் கோயிலுக்குப் போகக்கூடாது என்றுதானே சொல்லியிருக்கிறார்கள்..."

"பெண் இல்லையென்றால் ஆண் இல்லை. ஆண் இல்லை என்றால் கடவுளும் இல்லை. சிவவாக்கியர் பாடலைக் கேள்.

**ஐயிரண்டு திங்களாய் அடங்கிநின்ற தூமைதான்**
**கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டும் ஆகியே**
**மெய்திரண்டு சத்தமாய் விளங்கிரச கந்தமும்**
**துய்யகாயம் ஆனதும் சொல்லுகின்ற தூமையே.**

இதன் அர்த்தம் தெரியுமா..? பத்து மாத காலங்கள் தாயின் கருவறையில் அடங்கி நின்ற தீட்டினால் உயிர் வளர்ந்து, கைகள் இரண்டு, கால்கள் இரண்டு, கண்கள் இரண்டு ஆகி மெய்யாகிய உடம்பு திரண்டு உருவானது. அதில் சத்தம் கேட்கும் காதுகளும் ரசமாகிய சுவை உணர வாயும், கந்தமாகிய நாற்றம் உணர மூக்கும் தோன்றி சுத்தமான உடம்பு ஆனதும் உலகோர் சொல்லும் தீண்டத்தகாத தீட்டினால் உருவானதே என்பதே உண்மை. ஒரு உயிரைப் படைக்கும் பெண் தீட்டு என்றல் அவள் தீட்டில் பிறந்த அத்தனை மனிதரும் தீட்டு. இந்த கோயிலும் தீட்டு, கடவுளும் தீட்டு" என்று சிரித்தார் ஞானகுரு. அவரது சிரிப்பில் கலந்து கொள்ள முடியாமல் தவித்தார் மகேந்திரன்.

**மந்திரச் சொல்**

கவலைப்படுவதால்
நாளைய பிரச்னை
தீரப்போவதில்லை,
இன்றைய நிம்மதியும்
பறிபோய்விடும்.










## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

# ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும். ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைப வருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

**தொகை அனுப்ப வேண்டிய முகவரி:**
Gyanaguru Publication, Union Bank of India,
Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் -
9840903586, 7299753999

# உள்ளுணர்வை நம்புங்கள்... வெற்றி நிச்சயம்

## டிஜிட்டல் சாமியார் ஸ்டீவ் ஜாப்ஸ்

புத்திசாலிகள் முதலாளி ஆகிறார்கள், பெரும் புத்திசாலிகள் சாமியார் ஆகிறார்கள் என்பார்கள். ஒரு சிறு இழையில் சாமியாராகும் முயற்சியை கைவிட்டு, டிஜிட்டல் கடவுளாக மாறியவர் ஸ்டீவ் ஜாப்ஸ். உள்ளுணர்வு மீது முழு நம்பிக்கை வைத்தால் மாபெரும் வெற்றி கிடைக்கும் என்பதை உலகிற்குக் காட்டும் வகையில் வாழ்ந்து காட்டிய போராளி.

### பிறவியே தோல்வி

வேண்டாத பிள்ளையாகப் பிறந்தவர் ஸ்டீவ் ஜாப்ஸ். அமெரிக்க விஸ்கான்ஸின் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த அப்துல் ஃபட்டா ஜான் ஜண்டாலிக்கு ஜோயன் கரோல் சியபல் என்னும் சக மாணவியைப் பார்த்ததும் காதல் தீ பற்றிக்கொண்டது. இரண்டு பேரும் பின்விளைவுகள் தெரியாமல் எல்லை மீறி ஜாலியாக இருந்ததால் 1955ம் ஆண்டு மகன் ஸ்டீவ் பிறந்தார். விரும்பாமல், எதிர்பாராது வந்த குழந்தை என்பதால் இருவருக்கும் வளர்க்க முடியாத சூழல். அதனால், பழைய கார்கள் வாங்கி விற்கும் பால் ஜாப்ஸ் - கிளாரா தம்பதிக்குப் பிள்ளையைத் தத்துக் கொடுத்தார்கள்.

ஸ்டீவ் ஆறு வயது அடைந்ததும் அவனுடைய பிறப்பு ரகசியத்தைச் சொன்னார்கள். அந்த ரகசியம் குழந்தைக்குத் தெரிய வேண்டியது அவசியம் என்றே நினைத்தார்கள். இதைக் கேட்டதும் மனம் உடைந்துபோனார் ஜாப்ஸ். அந்த தம்பதியரின் அன்பு, ஆதரவினால் கொஞ்சம் கொஞ்சமாக தான் ஒரு அனாதை என்ற எண்ணத்திலிருந்து மீண்டுவந்தாலும், அந்த வடு அவரது மனதில் ஆறவே இல்லை.

### எலக்ட்ரானிக்ஸ் காதலன்

ஸ்டீவ் படிப்பில் அதிக ஈடுபாடு இல்லை என்றாலும் அதீத திறமை இருக்கிறது என்பதை நான்காம் வகுப்பு ஆசிரியை இமோஜின் கண்டுபிடித்தார். முதல் மார்க் வாங்கினால் ஐந்து டாலர் பரிசு தருவேன் என்று ஜாப்ஸ் திறமைக்கு ஒரு சவால் விட்டார். அந்த ஐந்து டாலருக்காகப் படித்து, ஆசிரியை எதிர்பார்த்தபடி முதல் மதிப்பெண் வாங்கி ஜெயித்தார் ஸ்டீவ். அதன் பிறகே அவருடைய திறமை அவருக்குத் தெரியவந்தது.

ஸ்டீவிடம் வயதுக்கு மீறிய சாமர்த்தியம் இருந்தது. அதேநேரம், எல்லாவற்றையும் அனுபவிக்கும் ஆர்வம் இருந்தது. அதனால் பள்ளிச் சிறுவனாக இருக்கும்போதே, மார்யுவானா, எல்.எஸ்.டி ஆகிய போதைப் பொருட்களை உபயோகித்தார். அவற்றில் பெரிதாக ஒன்றும் இல்லையென கண்டறிந்து, அந்த பழக்கங்களிலிருந்து சட்டென வெளியே வந்ததுதான் ஜாப்ஸின் தனித்தன்மை.

1960ம் ஆண்டுக்குப் பிறகு எலெக்ட்ரானிக்ஸ் யுகம் பிறந்தது. ஸ்டீவ் வசித்த கலிபோர்னியா மாநிலத்தில் ரேடியோ, தொலைக்காட்சி



www.gyaanaguru.com

போன்றவை எல்லா வீடுகளிலும் இடம் பிடிக்கத் தொடங்கின. ஸ்டீவுக்கு இவற்றில் எக்கச்சக்க ஆர்வம் வந்தது. அதனால் ரேடியோ, டி.வி. அசெம்பிள் செய்வதற்கான பாகங்களை வாங்கிக் குவித்தார். பூர்வ ஜென்ம பந்தம்போல் ஸ்டீவ் எலெக்ட்ரானிக்ஸை சிக்கெனப் பிடித்துக்கொண்டார்.

இந்த நேரம் வாஸ்னியாக் என்னும் சக மாணவருடன் நட்பு வளர்ந்தது. இருவரும் எலக்ட்ரானிக்ஸ் துறையைப் புரட்டிப் போட ஆசைப்பட்டார்கள். வாஸ்னியாக் ப்ளூ பாக்ஸ் என்னும் தொலைபேசிக் கருவி கண்டுபிடித்தார். அதன் மார்க்கெட்டிங்கை ஸ்டீவ் பார்த்துக் கொண்டார். நூறு கருவிகள் விற்றார். வாஸ்னியாக்கின் கண்டுபிடிப்புத் திறமை + ஸ்டீவின் மார்க்கெட்டிங் = பிசினஸ் வெற்றி என்று இருவரும் உணர்ந்தார்கள். கை கோர்த்துத் தொழில் தொடங்க முடிவு செய்தார்கள்.

## உள்ளுணர்வு தேடல்

இந்தக் கால கட்டத்தில் ஸ்டீவ் பள்ளிப் படிப்பு முடித்து கல்லூரியில் சேர்ந்தார். ஸ்டீவுக்குப் படிப்பு கசந்தது. நான் ஏன் பிறந்தேன்? என் வாழ்க்கையின் அர்த்தம் என்ன? என்கிற தத்துவக் கேள்விகள் அவர் மனதை அரித்தன. ஞானம் கிடைப்பதற்கு முன்பு புத்தர் இருந்தது போன்று குழப்பமான மனநிலைக்குப் போனார்.

குழப்பத்தை தீர்க்கும் வழி தேடினார். யார் என்ன வழி காட்டினாலும் அதை செய்யத் தொடங்கினார். அந்த வகையில் சைவ உணவுக்கு மாறினார். செருப்பு, ஷூபோடுவதை நிறுத்தினார். எங்கு போனாலும், வெறும் கால்களுடன் நடந்தார். ஊர், ஊராக சுற்றினார். ரோடு, நண்பர்கள் அறை என்று கண்ணில் கண்ட இடங்களில் தூங்கி எழுந்தார்.

வயிறு பசித்தால் குப்பையிலிருந்து காலி கோலா பாட்டில்களைப் பொறுக்கி எடுத்து கடையில் போட்டு காசு பார்த்து, அதில் சாப்பிட்டார். அதிக பசி என்றால் ஏழு மைல் தூரத்தில் இருந்த ஹரே கிருஷ்ணா கோவிலுக்கு நடந்துபோவார். அங்கே பிரசாதம் வாங்கிச் சாப்பிடுவார். இப்படிப் பதினெட்டு மாதங்களை ஓட்டினார்.

எதுவும் புரிபடாத நேரத்தில் நண்பர்கள் மூலம் அட்டாரி என்னும் வீடியோகேம்ஸ் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். வீடியோ கேம்ஸ்க்கு பணம் அள்ளித்தரும் ஒரு கூட்டத்தையும், சாப்பாட்டுக்குப் பிச்சை எடுக்கும் ஒரு மக்கள் கூட்டத்தையும் பார்த்து ஆச்சர்ய மானார். மனிதருக்குள் ஏன் இந்த வித்தியாசம் என்று பலரிடமும் கேட்டர் திருப்தியான விடை கிடைக்கவில்லை. மீண்டும் தேடத் தொடங்கினார்.

## திசை மாற்றிய இந்திய பயணம்

ஹரே கிருஷ்ணா கோயில் பிரசங்கம் ஒன்று அவர் மனதைக் கவர்ந்தது. இந்தியாவில் தன்னுடைய கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என்று நம்பினார். இமாலய மலைக்குச் சென்று நீம் கரோலி பாபாவை சந்தித்து தன் அத்தனை சந்தேகங்களுக்கு விடை கேட்க விரும்பினார். கையில் பணம் திரட்டிக்கொண்டு இந்தியா வந்தார். கொல்கொத்தா, ஹரித்வார் எனப் பல சுற்றல்கள். இந்திய உணவும், தண்ணீரும் ஸ்டீவ் உடலுக்குச் சேரவில்லை. ஒரே வாரத்தில் உடல் எடை 64 கிலோவிலிருந்து 55 கிலோவாகக் குறைந்தது. ஆனால், நீம் கரோலி பாபாவைப் பார்த்தாகவேண்டும் என்னும் வெறித்தனமான ஆசை. ரெயில், பஸ் பிடித்து ஆசிரமம் இருக்கும் நைனிடால் போனார். ஆசிரமத்தில் பாபா இல்லை.

பாபா எப்போது திரும்புவார் என யாருக்கும் தெரியவில்லை. அது வரை என்ன செய்வது என்று புரியாமல் நைனிடாலில் ஒரு அறை வாடகைக்கு எடுத்துத் தங்கினார். உள்ளூர்க் குடும்பம் ஒன்று அவருக்கு தினமும் சைவ உணவு சமைத்துக் கொடுத்தார்கள். உடல்நிலை கணிசமாகத் தேறியது. அந்த அறையில் யோகியின் சுயசரிதை புத்தகம் படித்தார். அது, பரம்ஹம்ஸ யோகானந்தாவின் வாழ்க்கை வரலாறு. சூப்பர் ஸ்டார் ரஜினிக்குப் பிடித்த புத்தகங்களில் ஒன்று.

ஸ்டீவ் திரும்பத் திரும்ப, மனப்பாடம் செய்யும் அளவுக்கு இந்த நூலைப் படித்தார். காவி உடைக்கு மாறினார். நீண்ட ஜடாமுடி, காவி உடை, போதைக் கண்கள். அவரே தீட்சை வாங்கின சாமியார் மாதிரி இருந்தார். இந்த காலகட்டத்தில் புத்த மதம் பற்றியும் தீவிரமாக ஆய்வு செய்தார். பலரிடமும் பேசினார். இந்த காலகட்டத்தில் அவர் மனதிலிருந்த பல குழப்பங்களுக்கு விடை கிடைத்தது.

அந்த நேரத்தில் ஒரு சாமியாரை சந்தித்தார் ஸ்டீவ். “உனக்கு இங்கு வேலை இல்லை, நீ உன் இடத்துக்குப் போ...” என்று உத்தரவு போட்டார். தன்னுடைய வாழ்க்கை ஆன்மிகப் பாதையா அல்லது அறிவியல் பாதையா என்ற குழப்பத்துக்குப் பதிலை அந்த சாமியார் கூறியதாக நம்பினார். உடனே இந்தியாவிலிருந்து கிளம்பினார்.


## ஞானம் கிடைத்தது

இந்த இந்திய பயணம் கொடுத்த உள்ளுணர்வு விழிப்பு குறித்து ஸ்டீவ், “அமெரிக்காவில் நாம் அறிவைப் பயன்படுத்துகிறோம். இந்தியக் கிராமங்களில் அறிவை விட உள்ளுணர்வைப் பயன்படுத்துகிறார்கள். உலகத்தின் மற்ற எல்லா மக்களையும்விட இந்தியர்களிடம் மட்டுமே உள்ளுணர்வு வளர்ச்சியடைந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரை அறிவை விட மிகச் சக்தி கொண்டது உள்ளுணர்வுதான். (இந்திய அனுபவத்தால்) நான் அறிவை விட உள்ளுணர்வை நம்பத் தொடங்கினேன்.

பழி போடுவதும், பிரச்னைகளில் இருந்து விலகி ஓடுவதும் எதிர்மறைச் சிந்தனையின் விளைவுகள். எனவே ஒருபோதும் எதிர்மறைச் சிந்தனைகளுக்கு இடமளிக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற எண்ணம் ஏற்படாது. மாறாக எப்படி இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்ற

**மந்திரச் சொல்**

மனிதரோ, பொருளோ அதனை இழந்த பிறகே, உண்மையான மதிப்பை உணர முடிகிறது.



www.gyaanaguru.com

## டிஜிட்டல் சாமியார்
## ஸ்டீவ் ஜாப்ஸ்

எண்ணமே தோன்றும்.

ஒவ்வொரு பிரச்னைக்கும் விளக்கங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் அதனால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. அதற்குப் பதிலாக, பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யவேண்டுமே தவிர, யார் மீது குறை சொல்லலாம் என்று யோசிக்கக் கூடாது என்பதைப் புரிந்துகொண்டேன்" என்று கூறியிருக்கிறார்.

இந்தியப் பயணமும் இந்து மதம், புத்த மதமும் அவர் மனதில் மிகப்பெரும் தாக்கத்தை உருவாக்கின. தன்னுடைய கனவை நோக்கி நடந்தார். ஸ்டீவ் மறுபடியும் அட்டாரி நிறுவனத்தில் வேலைக்குப் போகத் தொடங்கினார். இந்தக் காலகட்டத்தில் பழைய நண்பர் வாஸ்னியாக்குடன் சந்திப்பு நடந்தது. அவர் படிப்பை முடித்துவிட்டு, அன்றைய முன்னணி எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனமான ஹ்யூலெட் பக்கார்ட் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்திருந்தார். எலெக்ட்ரானிக்ஸில் ஈடுபாடு கொண்டவர்கள் இணைந்து ஹோம்ப்ரூ கம்யூட்டர் கிளப் என ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருந்தார்கள்.

அன்றைய காலகட்டத்தில் கம்யூட்டர் மிகப்பெரியதாக இருந்தது. அதை சிறிதாக மாற்ற வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோள். முதல் ஆப்பிள் கம்யூட்டர் உருவானது. ஆனால் அதை வாங்க யாரும் முன் வரவில்லை. மிகவும் சொற்ப எண்ணிக்கையில் கம்யூட்டர் மட்டுமே விற்பனையானது. இதற்கான காரணத்தை ஆய்வு செய்த ஸ்டீவ் ஜாப்ஸ், 'வடிவம் கவர்ச்சியாக இல்லை' என்ற முடிவுக்கு வந்தார். ஆகவே, அழகுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஸ்டீவ் ஜாப் ஸ்டைலாக கம்யூட்டரை உருவாக்கினார்.

### வாழ்க்கையில் திருப்பு முனை.

புதிய கம்யூட்டரை கண்காட்சியில் விற்பனைக்கு வைத்தார்கள். கம்யூட்டரைப் பார்த்ததும் அனைவருக்கும் பிடித்துப் போனது. போட்டி போட்டுக்கொண்டு





> ஐமேக், ஐபுக் என இரண்டு தயாரிப்புகள் சந்தையைத் திரும்பிப் பார்க்க வைத்தன. மேக் ஓஎஸ் எக்ஸ், ஆப்பிள் ஸ்டோர் அறிமுகப்படுத்தப்பட்டு ஆப்பிள் தயாரிப்புகள் புத்துயிர் பெற்றன. அமோக வெற்றி கிடைத்தது. ஃபைனல் கட், லாஜிக் ஆடியோ நிறுவனங்களை ஆப்பிள் கைப்பற்றியது.

ஆர்டர் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த முன் பணத்தை வைத்தே அடுத்தடுத்து கம்யூட்டர் தயாரித்து விற்பனை செய்தார்கள். கடுமையாக வேலை செய்தாலும் மிகப்பெரும் லாபம் கிடைக்க வில்லை. எனவே ஆப்பிள் நிறுவனத்திலிருந்து வெளியேறினார்.

அதன்பிறகு வாட்ஸ் டிஸ்னி நிறுவனம் மூலம் பிக்சார் என்ற அனிமேஷன் நிறுவனத்தை உருவாக்கினார். அது வெற்றி அடையவில்லை. அடுத்து நெக்ஸ்ட் என் சாஃப்ட்வேர் நிறுவனத்தை உருவாக்கினார் அதுவும் தோல்வி. எனவே மீண்டும் ஆப்பிள் நிறுவனத்திற்கே திரும்பினார். அங்கேயும் போராட்டமாகவே காலம் நகர்ந்தது. கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1996ல் ஐமேக் என்ற கம்யூட்டரை வடிவமைத்தார்.

இது நல்ல வரவேற்பு பெற்றது. இதையடுத்து ஐபுக் வெளியிட்டார். ஐமேக், ஐபுக் என இரண்டு தயாரிப்புகள் சந்தையைத் திரும்பிப் பார்க்க வைத்தன. மேக் ஓஎஸ் எக்ஸ், ஆப்பிள் ஸ்டோர் அறிமுகப்படுத்தப்பட்டு ஆப்பிள் தயாரிப்புகள் புத்துயிர் பெற்றன. அமோக வெற்றி கிடைத்தது. ஃபைனல் கட், லாஜிக் ஆடியோ நிறுவனங்களை ஆப்பிள் கைப்பற்றியது.

காலத்தின் வேகத்துக்கும், டெக்னாலஜியின் வளர்ச்சிக்கும் ஸ்டீவ் ஜாப் முன்னோடியாகத் திகழ்ந்தார். இந்த மாபெரும் வெற்றியைக் கொண்டாட முடியாமல் 2003ம் ஆண்டு ஜாப்ஸின் கணையத்தில் புற்றுநோய் கண்டறியப்பட்டது. அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்றுச் சிகிச்சைகள் நடந்தும் 2011ம் ஆண்டு மரணம் அடைந்தார். அதேநேரம், தொழில்நுட்பத்தில் முன்னோடி, பிரிமியர் பிராண்ட், பாதுகாப்பு என்ற வகையில் இன்றும் ஆப்பிள் நிறுவனம் இன்றும் முன்னணியில் இருக்கிறது என்றால், அந்த சிந்தனைகளின் அச்சாணி ஸ்டீவ்.

உள்ளுணர்வு சரியான இடத்துக்க் அழைத்துச் செல்லும் என்பதை அவர் இந்தியாவில் கற்றுக்கொண்டர். தொடர்ந்து தோல்வி கள், பிரச்னைகள் நேர்ந்தாலும் இறுதி முடிவு சரியாக இருக்கும் என்று நம்பினார். அந்த நம்பிக்கையாலே கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தின் மூலம் உலகையே அவரால் புரட்டிப்போட முடிந்தது. அதனாலே டிஜிட்டல் கடவுள் என்று போற்றப்படுகிறார்.

ஸ்டீவ் ஜாப் வாழ்க்கை மட்டுமல்ல, வார்த்தைகளும் ஒவ்வொரு நபரும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டிகள்.

- வாழ்க்கை என்பது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படியான நினைவுகளை, அனுபவங்களை உருவாக்குவதுதான்.
- உங்களின் எண்ணங்களை பிறர் எழுப்பும் சத்தத்தில் மூழ்கடிக்க அனுமதிக்காதீர்கள்
- வாழ்வில் மிகப்பெரும் செல்வமாக நான் கருதுவது பணமோ பொருளோ அல்ல, காலம் மட்டுமே.
- எல்லோரையும் போல சராசரியாக வாழ்க்கையில் திருப்தி அடையாதீர்கள். எந்தத் துறையில் இருந்தாலும் அதை அளவுகடந்து நேசியுங்கள். மற்றவர்கள் போல் உழைக்காமல் உங்களுக்கென்று தனித்தன்மையை உண்டாக்குங்கள். உதவி தேவைப்பட்டால், சரியான மனிதர்களிடம் தயக்கம் இல்லாமல் கேளுங்கள்.
- வெற்றி அடைந்தவுடன், அவ்வெற்றியிலேயே நின்றுகொண்டிருக்காமல், அடுத்த இலக்கை நோக்கி நகரத் தொடங்கிவிட வேண்டும்.
- இங்கே இருப்பது கொஞ்ச காலமே. பிறர் போன்று வாழ்ந்து வீணாக்க வேண்டாம்.
- நேற்று பற்றிய கவலைகளை மறந்து புதிய நாளையை உருவாக்க இன்று முன்னெடுங்கள்.
- தொழிலில் வெற்றியடைந்த பாதிப்பேரை வெற்றியடையாத மீதம் பேரிடமிருந்து பிரித்து வைப்பது அவர்களது விடாமுயற்சியே.
- நீங்கள் எத்தனை விஷயங்களை செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. அதனை எப்படி செய்கிறீர்கள் என்பதே முக்கியம்.
- புதிதாக ஒரு விஷயத்தை செய்யும்போது நிச்சயம் தவறுகள் நடக்கும். அதை ஏற்றுக்கொண்டு நமது மற்ற புதிய விஷயங்களை மெருகேற்றிக்கொள்வதுதான் புத்திசாலித்தனம்.
- உங்கள் குழந்தைகளை பணக்காரர்களாக வளர்க்காதீர்கள். மகிழ்ச்சியாக இருக்க கற்றுக் கொடுங்கள் - அதனால் அவர்கள் வளரும் போது, பொருட்களின் மதிப்பை அறிவார்கள், அவற்றின் விலை அல்ல...

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

# ஞானகுரு பதில்கள்




**? ஸ்மார்ட் ஒர்க் என்பதற்கு உதாரணமாக பூனைக்கு மணி கட்டச் சொல்கிறார்களே, அது என்ன கதை..?**

**- பி.காயத்திரி, பங்களாபுதூர்.**

**ஞானகுரு ;**


டாம் அண்ட் ஜெர்ரி எபிசோடுகளில் இதற்கு விடை இருக்கிறது. பூனையின் கழுத்தில் மணி கட்டிவிட்டால், அது வருவதை அறிந்து தப்பித்துக்கொள்ளலாம். பூனை வந்துவிடுமோ என்ற பயமில்லாமல் நிம்மதியாக சாப்பிடலாம். எனவே, பூனைக்கு மணி கட்டுவதற்கு எலி நிறைய முயற்சி எடுக்கும், எதுவும் பலிக்காது. அதன் பிறகு ஸ்மார்ட்டாக யோசிக்கும். ஒரு அழகான பரிசுப் பெட்டியில் மணியை பளபளப்பான ரிப்பனில் கட்டி வைத்து பூனைக்குப் பரிசாகக் கொடுக்கும். அந்த பரிசைப் பார்க்கும் பூனை மகிழ்ச்சியுடன் அதை எடுத்து தன் கழுத்தில் கட்டிக்கொள்ளும். அவ்வளவு தான், கதை முடிந்தது. எனவே, சிக்கலான தருணங் கள், தீர்க்கமுடியாத பிரச்னை என்று எதுவுமில்லை. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. கொஞ்சம் வித்தியாசமாக யோசியுங்கள், புதிய வழி கிடைக்கும்.

**? கணவருடன் அடிக்கடி சண்டை வருகிறது, எப்படி சரி செய்வது..?**

**- என்.மஞ்சுளா, பரமக்குடி.**

**ஞானகுரு :**

சின்னச்சின்ன விஷயங்களில் காட்டும் அசட்டையே பெரிய சண்டைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றன. இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுக்க கணவன், மனைவிக்கு வரக்கூடிய நான்கு முக்கிய பிரச்னைகள் கண்டறியப்பட்டுள்ளன. முதலாவது, எடுத்த பொருளை மீண்டும் அதே இடத்தில் வைக்காதது. இரண்டாவது ஈரத் துணி, துண்டு போன்றவைகளை படுக்கையில் போடுவது. மூன்றாவது ஃபேன், ஏசி, லைட் போன்றவைகளை ஆஃப் செய்யாதது. நான்காவது செல்போனில் யாருடன் பேசுகிறார் என்று எட்டிப் பார்ப்பது. கணவன், மனைவி மட்டுமல்ல, இரண்டு பேர் எங்கு சேர்ந்து இருந்தாலும் அங்கே கருத்து வேறுபாடு வரவே செய்யும். கணவன், மனைவி, பிள்ளைகள் இடையிலும் கருத்து வேறுபாடுகள் வந்துகொண்டே இருக்கும். எல்லா நேரத்திலும் ஒருவரே விட்டுக் கொடுப்பது என்றில்லாமல், ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி விட்டுக்கொடுத்தால் அங்கே எல்லாம் சுகமாகிவிடும்



**? இன்றைய வாழ்வுக்கு அவசியம் எது, அவசியமற்றது எது..?**

**- எஸ்.பூங்கோதை, ஆர்.ஐ. நகர்.**

**ஞானகுரு ;**

நம்மைப் பற்றி பிறர் என்ன நினைப்பார்கள் என்ற கவலை அவசியமற்றது. நம் உடல் மட்டுமே நமக்குச் சொந்தம் என்ற புரிதல் அவசியமானது.





**? உணர்ச்சிவசப்பட்டு எடுக்கும் முடிவுகள் வெற்றி தருமா, தோல்வி தருமா..?**

**- பி.சங்கரபாண்டியன், மல்லிகைத் தெரு.**

**ஞானகுரு ;**

மகிழ்ச்சியில் வாக்கு தரக்கூடாது. கோபத்தில் முடிவு எடுக்கவும் கூடாது. ஏனென்றால் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருக்கும் நபர்களால் உண்மையைக் காண முடியாது. கோபத்தில் இருப்பவர்களுக்கு தன்னைத் தவிர அத்தனை பேரும் சுயநலவாதிகளாகத் தெரிவார்கள். நெருக்கடியான காலகட்டம் என்றாலும் உணர்ச்சிவசப் படாமல் அமைதியான தருணத்தில் முடிவு எடுப்பதே வெற்றி தரும்.




**? கவலை இல்லாமல் வாழ அல்லது கவலையை மறந்து வாழ வழி சொல்லுங்கள் ஞானகுருவே..?**

**- எம்.சுமன்ராஜ், சூலக்கரை மேடு.**

**ஞானகுரு :**

பெரும்பாலான கவலைகள் மனிதர்கள் தாங்களாகவே உருவாக்கிக் கொள்வது தான். ஒவ்வொரு நபரும், அவரவருக்கு ஏற்ப கவலைகளை உருவாக்கிக்கொள்கிறார்கள். புதுச்செருப்பு வாங்க வேண்டும் என்று ஒருவர் கவலைப்படுவதும், புது மாடல் கார் வாங்க வேண்டும் என்று ஒருவர் கவலைப்படுவதும் கிட்டத்தட்ட ஒரே அளவுக்குத் துன்பம் தருகிறது. கவலைக்குக் காரணம் இல்லை என்றாலும், ஏன் கவலை இல்லை என்றும் கவலைப்படும் அளவுக்கு மனிதர்கள் கவலையுடன் வாழ்ந்து பழகிவிட்டார்கள். கவலையைக் கண்டு அஞ்சாமல் அதன் உண்மையான காரணத்தைத் தேடுங்கள், மறப்பதற்கு வழி கிடைத்துவிடும்.

**? வேலி பயிரை மேய்வதற்குக் காரணம் பேராசையா... நிராசையா?**

**- பி.புஷ்பகுமார், ஆர்.ஆர்.நகர்.**

**ஞானகுரு :**

வேலி பயிரை மேய்வதும் இயற்கையே. வெள்ளெலிகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். எக்கச்சக்கமாக குட்டிகள் போடும். திடீரென அவற்றில் ஒன்றிரண்டை வெள்ளெலி தின்று விடுவதுண்டு. நாய், பூனை, பாம்பு, மீன் போன்ற சில உயிரினங்களும் இப்படி செய்வதுண்டு. அப்படித்தான் பயிரை மேயும் வேலிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். எங்காவது ஒன்றிரண்டு பேர் தவறு செய்வதால் வேலியை ஒட்டுமொத்தமாக எடுத்துவிட முடியாது.

**? எழுவது, நடப்பது என்று எல்லா விஷயங் களுக்கும் அனுமதி பெற வேண்டும் என்று பெற்றோர் நினைப்பது சரியா?**

**- என்.பேச்சியம்மாள், அல்லம்பட்டி.**

**ஞானகுரு ;**

பெற்றோருக்கு அப்படி நினைப்பதற்குக் கூட உரிமை இல்லையா? பெற்றோர் சொல்வதை இன்று கேட்பதில்லை, கேட்கப் போவதும் இல்லை. பிறகு எதற்கு இந்த கேள்வி..?



**? இந்த வாழ்க்கையைப் புரிந்துகொள்வது எப்படி..?**

**கே.புஷ்மா, கோபி.**

**ஞானகுரு :**

வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கு அதிகம் சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லை. மூன்றே மூன்று இடங்களுக்கு சென்று வந்தால் வாழ்க்கை பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளலாம்.

- அரசு மருத்துவமனை - ஒரே ஒரு நாள் அரசு மருத்துவமனையில் உட்பிரிவு நோயாளிகள் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்று வாருங்கள்
- சிறைச்சாலை - இங்கு செல்வதற்கு கெடுபிடிகள் இருக்கும். எனவே, சிறையில் இருந்து வெளியே வந்த நபர்களிடம் உள்ளே என்னவெல்லாம் நடக்கிறது என்பதைக் கேட்டறியுங்கள்.
- சுடுகாடு - ஒரே ஒரு நாள் இடுகாட்டிற்கு எப்படிப்பட்ட உடல்கள் எல்லாம் எரிப்பதற்கு வருகின்றன என்று வேடிக்கை பாருங்கள். இந்த மூன்று இடங்களில் கிடைத்த அனுபவங்களை உங்கள் வாழ்க்கைக்குக் கொண்டு வாருங்கள். நீங்கள் சிறப்பான வாழ்க்கையில் இருப்பதை உணர்வீர்கள். இதுவே, மகிழ்ச்சி.


www.gyaanaguru.com

? வெட்கம், மானம், ரோஷம் போன்றவைகளை எந்த இடத்தில் பார்க்கலாம், எந்த இடத்தில் பார்க்கக்கூடாது?

– ஆர்.ஜமுனா ராணி, காவேரி நகர்.

**ஞானகுரு :**

வெட்கம், மானம், ரோஷம் போன்றவை அறிந்த நபர்கள் இருக்கும் இடத்தில் மட்டுமே உருவாகின்றன. தனிமையில் இருக்கையில், யாரும் அறியாத இடங்களில் யாரும் இவற்றைப் பொருட்படுத்துவதில்லை. ஆகவே, எப்போதும் நாம் தனிமையில் இருப்பதாக நினைத்துக் கொண்டால் போதும். வெட்கம், மானம், ரோஷம் போன்றவற்றை குப்பைக் கூடையில் போடுங்கள்.



? இன்று குடும்பங்களில் ஜெயிக்கிறது பந்த பாசமா அல்லது பணமா..?

– எம்.விநோதினி மனோகரன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

**ஞானகுரு :**

பணத்தால் ஜெயிக்க முடியும் என்றால் செல்வந்தர் வீடுகளில் சண்டை வரக்கூடாது, டைவர்ஸ் நடக்கக்கூடாது. ஆனால், அங்குதான் நிறைய பிரச்னைகள் நடக்கின்றன. ஆகவே, பணத்தில் குடும்பம் இல்லை என்பது உறுதியாகிறது. அன்பு மட்டுமே குடும்பத்தை சேர்த்து வைக்கும். பாசம் மட்டுமே நீண்ட காலம் நிலைத்து நிற்கும்.



? இன்பமும் துன்பமும் விதியின் பயனா... மதியின் பயனா?

– ஏ.ஜான்சன், என்.ஜி.ஓ. காலனி.

**ஞானகுரு :**

விதிப்படி நூறு வயதில் தான் மரணம் என்று தெரிந்தா லும், ரோட்டில் நடக்கும்போது இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் வண்டி வருகிறதா என்று பார்த்துவிட்டே கடப்பார் கள். விதி என்று கற்பிக்கப் பட்டிருக்கும் கட்டுக்கதைக்கு எந்த ஆதாரமும் இல்லை, அறிவியலும் இல்லை. எனவே, விதியை நம்பி ஏமாறாமல் மதியுடன் போராடுங்கள். நன்மையும் தீமைக்கும் நீங்களே காரணம் என்பதை ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டால் மதியின் நன்மை புரியும்.





? எதிர்காலம் பற்றிய சிந்தனை பயமுறுத்துகிறது, என்ன செய்வது..?

– வி.பாக்கியலட்சுமி, முத்தால்நகர்.

**ஞானகுரு :**

நாளை கன மழை வரப்போகிறது என்று வானிலை அறிக்கை வந்தவுடன் காரை பாதுகாப்பான இடத்தில் பார்க் செய்யலாம். குடை எடுத்து வைக்கலாம். மின்சாரம் போய்விட்டால் பயன்படுத்துவதற்கு மெழுகுவர்த்தி வாங்கி வைக்கலாம். இதேபோல் இன்னும் சில சின்னச்சின்ன ஏற்பாடுகள் செய்யலாம். ஆனால், மழை எத்தனை பெரிதாக வரும், எந்த நேரத்தில் வரும், எவ்வளவு நேரம் பெய்யும் என்பதெல்லாம் நமது கட்டுப்பாட்டுக்குள் கிடையாது. மழை வரலாம், வராமலும் போகலாம். வாழ்க்கையும் அப்படித்தான் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. எனவே, என்ன முடிகிறதோ அதை மட்டும் செய்யுங்கள் போதும். எதிர்காலம் சுலபமாகவும், சந்தோஷமாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். எது நடந்தாலும் நன்மைக்கே என்று ஏற்றுக்கொள்ளுங்கள்.






# 1 ஓர் ஆண்டு சந்தா 500 ரூபாய் செலுத்திவிட்டீர்களா..?




மனதுக்கு சந்தோஷம் தரும் **ஞானகுரு மகிழ்ச்சி,** உடலுக்கு ஆரோக்கியம் தரும் **ஞானகுரு யாக்கை** மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செல்போன் : 7299753999


வங்கிக் கணக்கு: GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA, IFS CODE : UBIN0554847, Current Accout No. 548401010050639




க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.

# விடாமுயற்சி என்றால் அஜித் அல்ல

# சில்வெஸ்டர் ஸ்டாலோன்.



கடவுளே, அஜித்தே என்று ஒரு கும்பல் நீண்ட காலமாக தமிழகத்தில் இருக்கிறது. விடாமுயற்சி என்றால் அவர்களுக்குத் தெரிந்தது நடிகர் அஜித் நடித்த படமும், சினிமாவில் வருவதற்கு அஜித் எடுத்துக்கொண்ட விடாமுயற்சிகளும் மட்டும் தான்.

விடா முயற்சிக்கு சரியான உதாரணம் யார் தெரியுமா..?


அவர், ’ராக்கி’, ’ரேம்போ’ போன்ற கதாபாத்திரங்களில் நடித்து கோடிக்கணக்கான மக்களின் மனதைக் கொள்ளையடித்த நடிகர் சில்வெஸ்டர் ஸ்டாலோன். நடிகர், குத்துச்சண்டை வீரர், திரைக்கதை எழுத்தாளர், தயாரிப்பாளர், இயக்குநர், ஓவியர், தன்னம்பிக்கை பேச்சாளர் என்றெல்லாம் அடையாளம் காட்டப்படுபவர்.

சினிமாவில் போன்று அவரது வாழ்க்கையில் வெற்றி அவருக்கு எளிதாகக் கிடைக்கவில்லை.

ஸ்டாலோன் பிறக்கும் போதே அவருக்கு சோதனை. குழந்தை வெளியே வருவதில் பிரச்னை இருந்ததால் போர்செப்ஸ் கருவியின் மூலம் அவரை வயிற்றிலிருந்து வெளியே இழுத்தார்கள். அப்போது நரம்பு பாதித்தது.. முகத்தில் சில பாகங்களில் செயலற்று போனது. குறிப்பாக உதடு, தொண்டை, இடது முகவாய்கட்டை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக பார்வை மற்றும் பேச்சும் பாதிக்கப்பட்டது. இந்த நேரத்தில் தந்தை பிரிந்துபோகவே, தாயினால் வளர்க்கப்பட்டார். முகம் பேச்சு காரணமாக பள்ளியில் சக மாணவர்களின் கேலிப் பொருளானார்.

தன்னை கேலி செய்யும் மாணவர்களைப் பயமுறுத்த வேண்டும் என்பதற்காக பாடி பில்டிங் பயிற்சிகளில் ஈடுபட்டார். நல்ல உடற்கட்டு கிடைத்ததும் கேலி செய்தவர்களே ஆச்சர்யமாக நெருங்கி வந்தார்கள். இந்த நேரத்தில் ஆக்ஷன் நடிகர் ஆகும் ஆசை உருவானது. எந்த வேடம் கிடைத்தாலும் நடிக்கத் தயாராக இருந்தார். சின்னச்சின்ன வேடங்களே கிடைத்தது. ஆனாலும் சினிமா கனவுடன் சுற்றிக்கொண்டு இருந்தார்.

அபார்ட்மெண்ட் வாடகை கொடுக்க முடியாமல் ரோடுகளில் தங்கியிருக்கிறார். ஆசை ஆசையாக வளர்த்த செல்ல நாயையும் விற்று சாப்பிடும் அளவுக்குப் போன பிறகும் ஸ்டோலனின் சினிமா




கனவு குறையவே இல்லை.

இந்த நிலையில் 1975, மார்ச் 24 அன்று உலகப் புகழ்பெற்ற வீரர்கள் முகமது அலியும், சக் வெப்னரும் மோதிக்கொண்ட ஒரு சண்டையை டிவியில் பார்த்தார். அந்த சினிமா அவருக்குள் மிகப்பெரும் பாதிப்பை உருவாக்கியது. குத்துச் சண்டையை மையமாக வைத்து ஒரு ஸ்கிரிப்ட் எழுதும் பரபரப்பு தோன்றியது. உடனே தன் மனதில் தோன்றிய கதைக்கு திரைக்கதை எழுதினார். கிட்டத்தட்ட 20 மணி நேர உழைப்பில் ராக்கி படத்துக்கு முழு திரைக்கதை, வசனம் எழுதிவிட்டார்.

இந்த கதை மிகப்பெரிய ஹிட் அடிக்கும் என்ற நம்பிக்கை ஸ்டோலனுக்கு இருந்தது. ஆகவே, தயாரிப்பாளர்களைத் தேடிப் போய் கதை சொன்னார். கிட்டத்தட்ட ஆயிரம் பேரிடம் கதை சொல்லியிருப்பார். ஒவ்வொரு நபரும் ஒரு காரணம் சொல்லி தட்டிக் கழித்தார்கள். சிலர் கதையை மட்டும் வாங்கிக்கொள்ள முன்வந்தார்கள். ஆனால், நானே ஹீரோவாக நடிப்பேன் என்பதில் சில்வெஸ்டர் உறுதியாக இருந்தார்.

கடைசியில் ஒரு தயாரிப்பு நிறுவனம் 1,25,000 டாலருக்கு கதையை வாங்க முன் வந்தது. ஆனாலும் வேறு ஒருவரை ஹீரோவாகப் போடலாம், அடுத்த படத்தில் கதாநாயகனாக நடிக்கலாம் என்று சமாதானம் செய்தார்கள். ஸ்டோலென் அசையவில்லை. எனவே, கதையை மூன்று மடங்குக்கு வாங்குவதாகச் சொன்னார்கள். அதற்கும் ஸ்டோலென் மசியவில்லை. அப்போது நண்பர்கள் சிலர் ஸ்டோலெனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்றே நினைத்தார்கள். இந்த பணத்தை வாங்கிக்கொண்டால், இதேபோய் நூறு கதை எழுத முடியும் என்று சொல்லி சம்மதிக்கச் சொன்னார்கள்.

ஆனால், ஸ்டாலோன் உறுதியாக இருந்தார். அந்த ஸ்டுடியோவினருக்கு ஸ்டாலோனின் கதை மிகவும் பிடித்திருந்தது. அதனால் குறைந்த செலவில் படத்தைத் தயாரிக்க முடிவு செய்தார்கள். அதன் பின்னர் நடந்ததெல்லாம் உலகமறிந்த வரலாறு. ஒரு மில்லியன் டாலர் செலவில் தயாரிக்கப்பட்டு, 200 மில்லியன் டாலரை சம்பாதித்துக் கொடுத்தது ராக்கி. சிறந்த திரைப்படத்துக்கான ஆஸ்கார் விருதுடன், சிறந்த இயக்குநர் மற்றும் சிறந்த எடிட்டிங் ஆகியவற்றுக்கான ஆஸ்கார் விருதுகளையும் தட்டிச் சென்றது.

அடுத்த 20 வருடங்களுக்கு, 1990-களின் கடைசி வரையில், ஸ்டாலோன் தயாரிப்பாளர்களின் காமதேனுவாகவே விளங்கினார்... அவருடைய படங்கள் பில்லியன் கணக்கில் டாலர்களை குவித்தன. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதற்கு இன்றும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார் ஸ்டோலென்.







# புதிய பார்வை, புதிய கண்ணோட்டத்தில்
# இதிகாச நாவல்

ஞானகுரு
பதிப்பகம்
வெளியீடு

| வண்ணப் புத்தகம் | கருப்பு வெள்ளை | இ-புக் |
| --- | --- | --- |
| 600 ரூபாய் | 300 ரூபாய் | 150 ரூபாய் |

உங்கள் பிரதிக்கு
80725
89355
அழைக்கவும்

80725 89355 செல்போன் எண்ணுக்கு பணம், முகவரி அனுப்புங்கள். எங்கள் செலவில் புத்தகம் அனுப்பிவைக்கப்படும் க்யூ ஆர் கோடு மூலமாகவும், வங்கிக் கணக்கிலும் பணம் அனுப்பலாம்.
GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA,
IFS CODE : UBIN0554847,
Current Account No. 548401010050639

